செய்தி வெளியீடு எண் : 693 நாள் : 12.04.2023

## செய்தி வெளியீடு

## பெருநகர சென்னை மாநகராட்சியின் சிட்டீஸ் திட்டத்தின் கீழ் சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு கிரிக்கெட் மற்றும் கால்பந்து பயிற்சியினை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (12.04.2023) தொடங்கி வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் சிட்டீஸ் (CITIIS – City Investments to innovate, Integrate and Sustain) திட்டத்தின் கீழ் சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு கிரிக்கெட் மற்றும் கால்பந்து பயிற்சி தொடக்கவிழா சைதாப்பேட்டை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இன்று (12.04.2023) நடைபெற்றது. இவ்விழாவில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பங்கேற்று கிரிக்கெட் மற்றும் கால்பந்து பயிற்சியினைத் தொடங்கி வைத்து பயிற்சி பெறும் மாணவ, மாணவியருக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். மேலும், கிரிக்கெட் பயிற்சியளிக்கும் ஜெனரேசன் நெக்ஸ்ட் கிரிக்கெட் அகாடமியின் இயக்குநர் திருமதி ப்ரீத்தி அஸ்வின் அவர்களிடமும், கால்பந்து பயிற்சியளிக்கும் கிரேட் கோல்ஸ் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநர்கள் திருமதி பிரியா கோபாலன் மற்றும் சந்தியா ராஜன் ஆகியோரிடமும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் வழங்கினார்.

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் இந்திய கிரிக்கெட் வீரர் திரு.ஆர்.அஸ்வின் அவர்கள், இந்திய நாட்டிற்கான பிரெஞ்சு நாட்டின் துணைத் தூதர் திருமதி லிசா டால்பட் பாரே அவர்கள் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். விழாவில் மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ் குமார் அவர்கள், முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, இ.ஆ.ப., அவர்கள், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் திரு.நா.இராமலிங்கம் அவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள் திரு.தனசேகரன் (கணக்கு), பாலவாக்கம் விஸ்வநாதன் (கல்வி), டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொது சுகாதாரம்), தா.இளைய அருணா (நகரமைப்பு) மண்டலக்குழுத் தலைவர் திரு. எம்.கிருஷ்ணமூர்த்தி , மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சிட்டீஸ் (CITIIS) என்ற சிறப்பு திட்டத்தின் வாயிலாக பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளை புதுமை மற்றும் மாதிரிப் பள்ளிகளாக தரம் உயர்த்தி மாற்றியமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக, பெருநகர சென்னை மாநகராட்சி குறிப்பிட்ட பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து, அப்பள்ளிகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், மின் ஆளுமையாக மாற்றியமைத்தல், கல்வியின் தரத்தை உயர்த்த ஆசிரியர்களுக்கு முறையாக பயிற்சி அளித்தல், கலை, இலக்கியம் மற்றும் விளையாட்டு போன்ற முக்கியக் கூறுகளை மேம்படுத்த ரூ.95.25 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக. விளையாட்டுகளில் மாணவர்களின் ஈடுபாடு மற்றும் பங்கினை அதிகரிக்க ஏதுவாக, சிட்டீஸ் (CITIIS) திட்டத்தின் கீழ், சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு கிரிக்கெட் மற்றும் கால்பந்து பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**கிரிக்கெட் பயிற்சி**

கிரிக்கெட் பயிற்சியானது, ரூ.19 இலட்சம் மதிப்பில் ஜெனரேசன் நெக்ஸ்ட் அகாடமியின் மூலம், இந்திய கிரிக்கெட் வீரர் திரு. ஆர். அஸ்வின் அவர்களின் வழிகாட்டுதலின்படி வழங்கப்பட உள்ளது.

சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரில் முறையான வரைவுத் திட்டத்தின்படி, 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களைத் தேர்வு செய்து, அதில் மிகத் திறமையான 30 மாணவ, மாணவியர் கொண்ட சென்னை பள்ளி கிரிக்கெட் அணி உருவாக்கப்படும். இப்பயிற்சி 12 மாதங்களில் வாரம் மூன்று முறை 154 பயிற்சி நாட்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிற்சி காலத்தில் மாணவ, மாணவியர் 22 நாட்கள் போட்டிகளில் பங்கு பெறுவர். இப்பயிற்சிகளில் பங்குபெறும் மாணவ, மாணவியருக்கு மட்டை, பந்துகள், காலணிகள் மற்றும் அத்தியாவசிய உபகரணங்கள் வழங்கப்படுகிறது.

நுங்கம்பாக்கம் சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாணவ, மாணவியர் கிரிக்கெட் பயிற்சி மேற்கொள்வதற்கு ஏதுவாக, 6 பயிற்சி தளங்கள் நவீன முறையில் உருவாக்கப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ளது.

**கால்பந்து பயிற்சி**

கால்பந்து பயிற்சியானது ரூ.8 இலட்சம் மதிப்பில் கிரேட் கோல்ஸ் அறக்கட்டளை என்கிற கால்பந்து பயிற்சி நிறுவனத்தின் சார்பில் மேற்கொள்ளப்படுகிறது.

கால்பந்து பயிற்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியின் 3 சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரை உள்ளடக்கிய கால்பந்து அணி உருவாக்கப்படும். முதற்கட்டமாக 60 மாணவ, மாணவியருக்கு பயிற்சி அளிக்கப்படும். 11 மாதங்களில் வாரம் இருமுறை என 80 நாட்களுக்கு இப்பயிற்சிகள் அளிக்கப்படும். மேலும், இப்பயிற்சிகளில் பங்குபெறும் மாணவ, மாணவியருக்கு கால்பந்து, ஆடைகள் மற்றும் காலணிகள் ஆகியவை வழங்கப்படும்.

இத்திட்டம் முதற்கட்டமாக வடசென்னை பகுதியில் நியூ மார்க்கெட் பார்ம் சென்னை உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் 20 பேர், மத்திய சென்னை பகுதியில் சைதாப்பேட்டையில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகள் 20 பேர் மற்றும் தென்சென்னை பகுதியில் கோட்டூர் சென்னை உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் 20 பேர் என மூன்று பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் 60 மாணவர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்படும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in